1974 மார்ச் 21]

இராதாபுரம் ஒன்றியத்திற்கு டிராக்டர்கள் வழங்கல்.

* 544 வினா—திரு. வி. கார்த்திசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமாக டிராக்டர், புல்டோசர் வாங்குவதற்கு அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், எப்போது டிராக்டர்கள் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

Wholesale rice trade

* 545. Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU V. BALASUNDARAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Government had any discussions with the Central Government during September 1973 on the takeover of the wholesale rice trade in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) அரிசி மொத்த வியாபாரத்தை மேற்கொள்வது குறித்து புதுடில்லியில் 1973 ஆகஸ்டு 16-ம் தேதி நடந்த பேச்சு வார்த்தையில் மாண்புமிகு முதலமைச்சர் சார்பில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கலந்து கொண்டார். மாநில அரசு மட்டும் அரிசி மொத்த வியாபாரத்தை மேற்கொள்வதானது தற்போது செயல்பட்டு வரும் சீரான முறையைப் பாதிக்கும் என்று பேச்சு வார்த்தையின்போது குறிப்பிட்டார். கொள்முதல் செய்யப்பட்ட அளவில் வரையறுத்த பொது விநியோக முறைக்காகத் தேவைப்படும் அரிசியை வைத்துக் கொண்ட பின்னர் உபரியாயிருக்கும் அரிசியை மத்திய தொகுப்பு இருப்புக்கு வழங்க இயலும் என்று கூறினார்.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மொத்த வியாபாரத்தை எடுத்து மாநில அரசுக்கு விட்ட காரணத்தால் பற்றுக்குறை உள்ள அஸாம் போன்ற மாநிலங்களில் இது வெற்றிகரமாக நடக்கிறது. ஆகவே, அப்படி நம் சர்க்காரும் கொள்முதல் செய்து மக்களுக்கு அரிசி நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கு வழி செய்யலாமே. எனவே, இந்த மொத்த வியாபாரத்தைக் கைவிடக் காரணம் என்ன ?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதை மாநில அரசு ஒரு கொள்கையாக வகுக்க முடியாது. மத்திய அரசு கொள்கையை வகுக்க வேண்டும். மத்திய அரசு அதில் ஒரு சரியான முடிவிற்கு வரவில்லை. பற்றுக்குறை மாநிலங்களில் வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். முதல் அமைச்சர்கள் உணவுப் பங்கீடு பற்றிய மாநாட்டில் பேசும்போது கூட—அச்சுத மேனன் அவர்கள், சபையில் இல்லை—அப்போதிருந்த சேர்மன் அவர்கள் சொன்னார்கள், கேரள முதல் அமைச்சர் அவர்களால் கூட இந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியவில்லை, ஆகவே யோசித்துச் செய்யவேண்டும் என்ற முறையில் அவர்கள் தலைமை உரையில் பேசியிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த மொத்த வியாபாரத்தை மத்திய அரசே ஏற்று நடத்தக்கூடிய ஒரு நிலை இருந்தால் அது மாநில அரசை ஏதாவது சங்கடத்தில் ஆழ்த்துமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றி பின்னால் யோசித்துத்தான் சொல்லமுடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அரிசி மொத்த வியாபாரம் பற்றி இப்போது தென் மண்டலத்தை மறுமுறையும் அமல் படுத்தவேண்டும் என்ற ஒரு ஆலோசனையை மத்திய சர்க்கார் நம் மாநில சர்க்காருக்கு தெரிவித்ததாகப் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அப்படி ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? இந்த தென் மண்டலத்தை உருவாக்குவது பற்றி இந்த அரசு கொள்கை ஏதாவது தீட்டியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி ஒன்றும் சர்க்காருக்கு வந்ததாகத் தெரியவில்லை.

1974 மார்ச் 21]

திரு. கே. டி. கே. தங்கமணி : கோதுமை மொத்த வியாபாரத்தை, அரசு நடத்துவது என்று மத்திய சர்க்கார் சில மாநிலங்களில் ஏற்று நடத்தினார்கள். தயாரிப்பு சரியாக இல்லாததால் தோல்வி அடைந்து விட்டது என்று சொல்கிறார்கள். அரிசி மொத்த வியாபாரத்தை ஏற்று நடத்தவேண்டுமென்று கொள்கை ரீதியாக ஒத்துக்கொள்ள மத்திய சர்க்கார் தயங்குவதாகத் தெரிகிறது. நம் சர்க்காரைப் பொறுத்தவரையில் நாம் இம்மாதிரி மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று சொல்லி மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றிய ஒரு கொள்கையை தீர யோசித்துத்தான் செய்யவேண்டும். இப்போதுள்ள முறை சரியாக இருப்பதால், இந்த முறை சரியாக செயல்படவில்லை என்றால்தான் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் மேலும் பொறுப்பை சுமந்து கொண்டு வாங்கக் கூடிய மக்களுக்கு ஆபத்து வராத முறையில் காப்பாற்றவேண்டும். மத்திய அரசின் தலையீடு இருப்பதால், இப்போதுள்ள முறை சரியாக செயல்படவில்லை என்றால்தான் அதைப்பற்றி யோசித்து முடிவு செய்யவேண்டும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாநில உணவு வழங்கு கார்ப்பரேஷன் மூலம் இந்த அரிசி மொத்த வியாபாரத்தை நடத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெறுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதுபற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். புதிய முறையை ஏற்படுத்துவது என்றால் இப்போதுள்ள முறை சரியான முறை இல்லை என்ற முடிவுக்கு வந்த பின்னர்தான் புது முறையை நாம் கொண்டுவர வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : Serveral governments have failed because of wholesale trading in rice and foodgrains. May I know from the Hon. Minister whether they would continue the present system of not having wholesale trade in rice and foodgrains?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எல்லாவற்றையுந்தான்.

[1974 மார்ச் 21

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தற்போது இருக்கக்கூடிய முறை சரியாகத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். தற்போதுள்ள முறையிலும் பல வித கோளாறுகளைப் பார்க்கிறோம். இப்போது ரேஷன் கார்ட்ஸ் வாங்கமுடியவில்லை. ஏராளமான பெரிய க்யூக்கள் இருக் கின்றன. பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. அதைப் பத்திரிகைகளில் போட்டோ எடுத்துக்கூட போட்டிருக் கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றையெல்லாம் பற்றி நாளைவரும் டிமாண்டில் பேசிக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தற்போதுள்ள முறை திருப்தி கரமாக இருக்கிறதா, சரியாக இருக்கிறதா, அதுபற்றி விளக்கம் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சரியாகத்தான் இருக்கிறது. ஒருசிலயிடங்களில் அங்குள்ள அதிகாரிகளால் தாமதம் ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து திருத்தப்படும். இவைபற்றி பத்திரிகைகளில் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட் மூலம் அறிக்கைகள்கூட விட்டுக்கொண்டிருக் கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: சாதாரணமாக உணவுப்பொருள்களை நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பல பேர்கள் வாங்கி அது வாங்கி உண்பவர்களுக்குக் கிடைக்கும்போது இடையில் பல பேர்கள் இருப்பதால் அவர்களுக்கும் லாபம் போவதால் உணவுப் பொருள்களின் விலை உயருகிறது என்பது சாதாரணமாக அவ்வளவு பேர்களும் உணர்ந்த ஒன்றாகும். இன்று நம் மாநிலத்தில் அதிக உற்பத்தி இருக்கும் நிலையில் முழுவதையும் அரசே எடுத்து விநியோகம் செய்தால் இப்போதிருப்பதை விட இன்னும் குறைவான விலைக்கு மக்களுக்கு நாம் உணவுப் பொருள்களை வழங்க முடியுமே, அந்த முறை பற்றி இந்த அரசு ஏன் சிந்திக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது கூட கோர்ஸ் க்ரெயின்ஸ், சோளம், கம்பு, கேழ்வரகு இவற்றிற்கு ஒரு கட்டுப்பாடு இருந்தது. அகில இந்திய சர்க்கார் அந்தக் கட்டுப்

1974 மார்ச் 21]

பாட்டை. எடுத்துவிட்டார்கள். கட்டுப்பாட்டில் வைப்பதற்கான உத்தரவை கேட்டுக் கொண்டிருக்கிறோம். எந்த ஒரு கொள்கையை வகுத்தாலும் உற்பத்தியாளரின் விலையைக் குறைக்காத அளவிலும், அதேசமயத்தில் அதை வாங்கிப் பயன்படுத்தும் மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், விலை ஏருமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : அரிசி மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு மத்திய அரசின் உத்தரவு வேண்டுமென்று சொன்னார்கள். வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலையில் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். இப்போது வியாபாரிகளை கொள்முதல் செய்ய விட்டுவிட்டு அவர் களிடம் லெவி வாங்குகிறோம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்தால் விவசாயி களுக்கும் நியாயமான விலை கிடைக்கும், மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்கும். எனவே, வியாபாரிகளிடமிருந்து லெவி வாங்குவதற்குப் பதிலாக அரசு நேரடியாகவே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வது, மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். லெவி வாங்கக் கூடாது என்றால், மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்கள். அதுபற்றி யோசித்து பின்னால்தான் முடிவு செய்யமுடியும்.

உணவுப் பொருள்கள் கடத்தல்.

***546 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில், தமிழகத்தி லிருந்து உணவுப்பொருட்களை கள்ளத்தனமாக கடத்தியவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர், மாவட்டவாரியாக?

(இ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?